

மே 13

# பாத்திமாவில் அன்னையின் முதல் காட்சி (1917)

எண்பது லட்சம் உயிர்களைக் கொள்ளை கொண்ட முதல் உலகப்போரின் போது 13.05.1917-ல் தேவதாய் போர்த்துக்கல் நாட்டில் உள்ள பாத்திமா என்னும் ஊருக்கு அருகில் மூன்று சிறுவர்களுக்கு தோன்றினாள். பலவித தொல்லைகளால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த உலகைக் காப்பாற்றும் வழிகளைக் காட்ட அன்னை வந்தாள். மக்கள் எண்ண முடியாத பாவங்களைச் செய்து கடவுளை மனநோகச் செய்கிறார்கள். மரியாவின் மாசற்ற இருதயத்திற்கும் நிந்தை வருவிக்கிறார்கள். மானிடர் எல்லோரும் தங்கள் வாழ்க்கையைத் திருத்தி அமைக்க வேண்டும். மேலும் மேலும் பாவம் செய்யக் கூடாது. பாவிகளை மனந்திருப்ப செபிக்க வேண்டும். பரித்தியாகங்கள் செய்ய வேண்டும். பரித்தியாகங்கள் செய்யும்போது "ஓ என் இயேசுவே, நான் உம்மை நேசிப்பதாலும் பாவிகள் மனந்திரும்பவும், மரியாவின் மாசற்ற இருதயத்திற்கு இழைக்கப்படும் நிந்தைக்குப் பரிகாரமாகவும் இந்த பரித்தியாகத்தை செய்கிறேன்" என்று சொல்ல வேண்டும். உலக சமாதானத்திற்காக பக்தியுடன் அடிக்கடி செபமாலை செபிக்க வேண்டும். "ஓ என் இயேசுவே, எங்கள் பாவங்களை மன்னியும். நரக நெருப்பில் விழாமல் எங்களை காப்பாற்றும் எல்லா ஆன்மாக்களையும், சிறப்பாக உமது இரக்கம் யாருக்கு மிகத் தேவையோ அவர்களையும் மோட்சத்தில் சேர்த்தருளும்" என்று செபமாலையில் ஒவ்வொரு பத்து மணி செபத்திற்குப் பின்னும் சொல்லவேண்டும். மரியாவின் மாசற்ற இருதயத்தின் மீது அனைவரும் பக்தி கொண்டிருக்க வேண்டும். ஆறுமுறை காட்சிகளின் போதும் அன்னை விடுத்த செய்தியின் சுருக்கம் இது.

**சிந்தனை:**

"செபமாலை செபித்ததின் பயனை மனந்திரும்பாத பாவியை நான் கண்டதில்லை" (புனித கிளமென்ட்)

**செபம்:**

மரியாவின் மாசற்ற இருதயமே, திருச்சபையையும், உலகத்தையும் காப்பாற்றும்.